என்று ஷோகாஸ் நோட்டீஸ் கொடுக்கத் தயாராயிருக்கிறோம். சவுத் இந்தியா விஸ்கோசில்கூட அண்மையில் ஒரு ட்ரீட்மெண்ட் ப்ளாண்ட் ஒரு கோடி ரூபாய் செலவில் செய்திருக்கிறார்கள். எந்தக் கழிவுநீராக இருந்தாலும் ட்ரீட்மெண்ட் ப்ளாண்ட் போட்டு பயாலாஜிக்கல் கண்டென்ட்ஸ்யைக் குறித்து கன்டென்ட்ஸ் இவ்வளவுக்கு மேல் இருக்கக் கூடாது, என்று சில டெக்னிக்கல் டீட்டெயில்ஸ் இருக்கின்றன. அதற்காக வற்புறுத்தி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள உத்தரவு போட்டிருக்கிறோம். எல்லோருக்கும் தெளிவாக ஒரு சர்குலர் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

Show cause notice has been issued why licence should not be removed.

என்று கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

சென்னை அரசினர் பொது மருத்துவ மனைக்கு கூடுதல் பிண ஊர்திகள் வழங்கும் திட்டம்

*வினா எண். 393—திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக் விடையளிப்பாரா—

(அ) சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் புறநகர் பகுதிகளுக்கு பிணங்களை எடுத்துச்செல்ல பிணவறை ஊர்தி இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் தனியாக புறநகர் பகுதிகளுக்கு பிணவறை ஊர்தி ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) புறநகர்ப் பகுதிகளுக்கென்று தனியாக ஒரு பிண ஊர்தி சென்னை அரசு பொது மருத்துவ மனைக்கு வழங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.